செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஒன்றியம், தட்டாம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் இலத்தூர் ஒன்றியத்தில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 11 கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு, இலத்தூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சாந்தி ராமச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட

தமிழ்நாட்டு மீனவர்கள் தாயகம் திரும்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்வீர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, பிப். 15-

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களை தாயகம் திரும்ப உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடித விவரம் வருமாறு:-

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட 12 தமிழக மீனவர்களில், 9 மீனவர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில் மூன்று மீனவர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் சிறைத்தண்டனையும், இலங்கை ரூபாய் மதிப்பில் தலா 11.60 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, விடுவிக்கப்பட்ட மீனவர்கள் உடனடியாக தாயகம் திரும்ப உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (14.02.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் மற்றும் 28.12.2025 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் தொடர்பாக இலங்கையின் யாழ்ப்பாணம் நீதிமன்றம் 03.02.2026 அன்று வழங்கிய தீர்ப்பு குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள முதலமைச்சர் அவர்கள், சிறை பிடிக்கப்பட்ட 12 தமிழக மீனவர்களில், 9 மீனவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும், மூன்று மீனவபடகு ஓட்டுநர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனையும், இலங்கை ரூபாய் மதிப்பில் தலா 11.60 லட்சம் அபராதமும், அபராதத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் கூடுதலாக மூன்று மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பு அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 9 மீனவர்களும் 05.02.2026 அன்று மிரிஹானா தடுப்பு மையத்திற்கு மாற்றப்பட்டதாகவும், தாயகம் திரும்பு வதில் உள்ள நடைமுறை தாமதம் காரணமாக அவர்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நம் நாட்டு மீனவர்கள் அங்கு சந்திக்கும் கடினமான சூழ்நிலையையும், மீனவர்களின் குடும்பங்கள் இங்கு எதிர்கொள்ளும் துயரங்களையும் கருத்தில் கொண்டு, விடுவிக்கப்பட்ட மீனவர்களை விரைவில் தாயகம் திரும்ப தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மூன்று மாதத்திற்கு ரூ.3000 – கோடைக்கால சிறப்புத் தொகை ரூ. 2000 என

ரூ.5000 வழங்கி சூழ்ச்சியை ஒழித்து மகளிருக்கு இன்ப அதிர்ச்சியை அளித்துள்ளார் முதல்வர்!

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நலக் கூட்டமைப்பு தலைவர் சா.அருணன் பாராட்டு!

சென்னை, பிப். 15-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை தடை செய்ய நினைத்து செயல்படுவதை அறிந்து முன்கூட்டியே மூன்று மாதம் ரூ.3000 மற்றும் கோடை கால சிறப்பு தொகை ரூ.2000 என ரூ.5000 வழங்கி சூழ்ச்சிக்கு புற்றுப்புள்ளி வைத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ் நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்ட மைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் பாரா ட்டுத் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு தி.மு.க. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று தமிழ்நாடு முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றார். அப்போது கொரோனா பெருந்தொற்று காரணமாக நிதிநிலை மோசமாக இருந்தது மக்களின் அன்றாட வாழ்க்கையே கேள்விக் குறியாக இருந்தது மக்களின் நலனே தன் நலன் என எண்ணி ஒன்றிய அரசு வஞ்சனை செய்து நிதி ஒதுக்காத நிலையிலும் ,மக்களின் அன்றாட வாழ்க்கையை போக்க வழியில்

லாத சூழ்நிலையில் அவர்களின் வறுமையை அறிந்து அனைத்து குடும்ப த்திற்கும். இரண்டு தவணையாக என இரண்டு மாதங்களுக்கு மாதா மாதம் தலா ரூ. 2000 வழங்கி ஏழைகளின் சிரிப்பில் இறைவனை கண்டவர்.

அதோடு விட்டுவிடாமல் ஏழை எளியவர்களின் உள்ள உணர்வுகளை அறிந்தவராக அரசின் நிதிநிலை மோசமாக இருந்தாலும் ஒன்றிய அரசு வஞ்சித்தாலும் பரவாயில்லை என உன்னத உணர்வோடு மாநிலத்தின் நிதி நிலையையும் சரி செய்ய வேண்டும் அதே நேரத்தில் எம் மக்களையும் விட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து நிதி நிலையையும் படிப்படியாக சரி செய்து நியாய விலைக் கடைகளில் விலையில்லா சமையலுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி உதவினார்.

மேலும் முதலமைச்சரின் விடியல் பயணம் என்ற திட்டத்தை தொடங்கி மகளிருக்கு இலவச பேருந்து பயணம் தொடங்கி ஏழை பெண்களின் சிரமத்தை போக்கினார். ஏழை அரசு பள்ளி மாணவர்களின் இடைநிற்றலை தடுக்க இல்லம் தேடிக்கல்வி திட்டத்தை கொண்டு தன் வீட்டிற்கே வந்து பாடம் எடுக்கும் திட்டத்தை கொண்டு வந்தவர் தான் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

உயர்கல்வி பயில புதுமை பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், கல்லூரி கனவு, நான் முதல்வன் என பல திட்டங்களை ஏழை அரசு பள்ளி மாணவ - மாணவிகள் மேற்படிப்பில் சேர்ந்து பயன்பெறும் வகையில் இதுபோன்ற திட்டங்களை கொண்டுவந்து ஒவ்வொரு குடும்பத்தினரால் அப்பா என அன்போடு அழைக்கப்பட்டார்.

மேலும் பெண்கள் தான் ஒரு குடும்பத்தை வழி நடத்துகிறார்கள் என்பதை உணர்ந்து மகளிர் உரிமைத் தொகை என்ற மாபெரும் திட்டத்தை அறிவித்து 1கோடியே 30 லட்சம் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000/- வழங்கி வரலாறு படைத்து வருகிறார். இது ஏழை எளிய நடுத்தர குடும்பங்களுக்கு பெரும் உதவியாக இருந்து வருகிறது. தற்போது அதை தடுக்கும் பொருட்டு தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை தடுக்க நினைத்ததை அறிந்து மூன்று மாதத்திற்கு சேர்த்து அதாவது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மாதம் ரூ.1000 என ரூ.3000/- மும் கோடைக்கால சிறப்பு தொகையாக ரூ 2000 என மொத்தம் ரூ.5000 வழங்கி சூழ்ச்சியை ஒழித்து மகளிருக்கு மாபெரும் இன்ப அதிர்ச்சியை அளித்துள்ளார். அதாவது தொடர்ந்து மாதாமாதம் ரூ.1000 வழங்கி வரும் நிலையில் சில சூழ்ச்சியால் வஞ்சனையால் தடை செய்யப்பட்டால் ஏழைப் பெண்கள் அவதிப்படக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு குடும்ப தலைவி வங்கிக் கணக்கில் ரூ.5000 செலுத்தி மகளிர் எதிர் வரும் மாதங்களில் சிரமப்ப டக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து தொடர்ந்து அடுத்து ஆட்சிக்கு வந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை ரூ. 2000 வழங்குவோம் என்ற அறிவிப்பு மூலம் என்றும் மக்கள் தலைவர் என்பதை நிரூபித்துள்ளார்.

மேலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்த ப்பட்ட அகவிலைப்படி உயர்வை ஒன்றிய அரசு எப்போதெல்லாம் உயர்த்தி வழங்குகிறதோ அப்போதெல்லாம் வழங்குவேன் என அறிவித்து உயர்த்தி வழங்கி வருகிறார். ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தையும் வழங்க உத்தரவிட்டு வழங்கி வருகிறார் என்தையும் நினைவு படுத்தி எல்லோருக்குமான தலைவர் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ் நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்ட மைப்பு சார்பில் பாராட்டுக்கள்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம்

தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருவாரூர் மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், திருத்துறைப்பூண்டி நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வருவதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 17 (செவ்வாக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவாரூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்கள் சிறப்பு மகளிர் உரிமை தொகையாக ரூபாய் 5,000 தந்து,அடுத்து அமையும் நம் ஆட்சியில் இந்த தொகை உயர்த்தி தரப்படும் என்று அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பிகே.சேகர்பாபு ஆலோசனைப்படி கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., திரு.வி.க.நகர் தொகுதியில் கே.எம்.கார்டன்பகுதி அருகில் உள்ள ATM மையம் அருகில் நன்றி தெரிவித்து இனிப்புகளை வழங்கினார்.

முதல்வரின் அதிரடி சிக்ஸர்! மகிழ்ச்சி கடலில் மகளிர்!

1.31 கோடி மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு!

"தினகரன்" நாளேடு வரவேற்பு!

சென்னை, பிப்.15-

1.31 கோடி மகளிர்க்கு ரூ.5 ஆயிரம் என்ற முதல்வரின் அதிரடி சிக்ஸரால் மகளிர் மகிழ்ச்சி கடலில் உள்ளனர் என்று, 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப் பிட்டுள்ளது.

இதுகுறித்து 14.2.2026 தேதிய 'தினகரன்' தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

மகிழ்ச்சியில் பெருமகிழ்ச்சியே அடுத்தவரை மகிழ வைத்து பார்ப்பதுதான் என்பார்கள். அந்த வகையில் பொங்கல் பரிசுத்தொகை ரூ.3 ஆயிரம் கிடைத்த மகிழ்ச்சியில் தமிழக மக்கள் உற்சாகமாக பொங்கல் கொண்டாடி மகிழ்ந்தனர். அதிலிருந்து மீள்வதற்குள் இன்ப அதிர்ச்சியாக நேற்று காலை மகளிர் உரிமைத்தொகை பெறும் 1.31 கோடி பேருக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் என்ற வகையில் ரூ.3,000, மே மாதத்தில் கோடைக்கால சிறப்பு செலவுகளுக்காக ரூ.2 ஆயிரம் என ரூ.5 ஆயிரத்தை சேர்த்து வழங்கி தமிழக மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். 2021 சட்டமன்ற தேர்தலின்போது மகளிருக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்படுமென திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது. கொரோனா கால உதவித்தொகையும் வழங்கப்படுமென அறிவித்தது. அதிமுக ஆட்சி அவலத்தால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டிருந்த நிலையிலும் சூழலை சமாளித்து கொரோனா உதவித்தொகை ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும், மகளிர் உதவித்தொகை திட்டத்துக்கு தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 2023, செப். 15ம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாளன்று மகளிர் உதவித்தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதுவரை இந்த திட்டத்தின்படி மகளிர் கணக்கில் ரூ.34,000 வரை வரவு வைக்கப்பட்டுள்ளது. ஒரு சேமிப்பாக இதை வைத்திருந்தால் கூட, நடுத்தர மற்றும் ஏழை, எளிய குடும்பத்துக்கு இது மிகவும் பயனுள்ள தொகையாகும். முதல்கட்டமாக 1.13 கோடி பேருக்கு வழங்கப்பட்ட இத்தொகை, விரிவுப்படுத்தப்பட்டு 1.31 கோடி பேருக்கு வழங்கப்பட்டது. தகுதியுள்ள அனைவருக்குமே உரிமைத்தொகை கிடைத்துள்ள தால் பெண்கள் உற்சாகத்தில் திளைக்கின்றனர்.

தினகரன்
பிப்ரவரி 14, 2026 சனிக்கிழமை

மகிழ்ச்சி கடலில் மகளிர்

மகிழ்ச்சியில் பெருமகிழ்ச்சியே அடுத்தவரை மகிழ வைத்து பார்ப்பதுதான் என்பார்கள். அந்த வகையில் பொங்கல் பரிசுத்தொகை ரூ.3 ஆயிரம் கிடைத்த மகிழ்ச்சியில் தமிழக மக்கள் உற்சாகமாக பொங்கல் கொண்டாடி மகிழ்ந்தனர். அதிலிருந்து மீள்வதற்குள் இன்ப அதிர்ச்சியாக நேற்று காலை மகளிர் உரிமைத்தொகை பெறும் 1.31 கோடி பேருக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் என்ற வகையில் ரூ.3,000, மே மாதத்தில் கோடைக்கால சிறப்பு செலவுகளுக்காக ரூ.2 ஆயிரம் என ரூ.5 ஆயிரத்தை சேர்த்து வழங்கி தமிழக மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். 2021 சட்டமன்ற தேர்தலின்போது மகளிருக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்படுமென திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது. கொரோனா கால உதவித்தொகையும் வழங்கப்படுமென அறிவித்தது. அதிமுக ஆட்சி அவலத்தால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டிருந்த நிலையிலும் சூழலை சமாளித்து கொரோனா உதவித்தொகை ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும், மகளிர் உதவித்தொகை திட்டத்துக்கு தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த வகையில் தை மாதம் நெருங்கும் நேரத்தில் பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம், நேற்று ரூ.5 ஆயிரம் என ஒரு மாத காலத்திற்குள் பெண்கள் கையில் ரூ.8 ஆயிரம் வரை வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. ஏற்கனவே, மகளிர் விடியல் பேருந்து பயணம் மூலம் இலவச பயணம் மேற்கொள்ளும் பெண்கள், மாதம் ரூ.900 முதல் ரூ.1,300 வரை சேமிப்பதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. அந்த வகையில் தங்களது குடும்ப நிலையை உணர்ந்து திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு தமிழக மக்கள் தங்களது பெருநன்றியினை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "தேர்தலைக் காரணம் காட்டி அடுத்த 3 மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமை தொகையை நிறுத்த சூழ்ச்சி செய்வதாகவும், வழக்கு தொடர சிலர் முயல்வதாகவும் தகவல் கிடைத்துள்ளது. கடும் கோடை காலத்தில் இப்பணம் நிறுத்தப்பட்டால் உங்களுக்கு ஏற்படும் துன்பத்தை என்னால் உணர முடிகிறது. அதை மனதில் கொண்டே பிப்ரவரி மாதத்தோடு அடுத்த 2 மாதங்கள், கோடை சிறப்பு நிதி என ரூ.5 ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

அடுத்த திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில் உங்களுடைய உரிமைத்தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த வாக்குறுதியும் நிறை வேற்றப்படும்" என கூறியுள்ளார். மகளிர் உரிமைத் தொகை வரவுக்கு காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வாழ்த்துகளையும் கட்சித்தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர். ஏற்கனவே, தமிழக அரசின் இத்திட்டத்தை பின்பற்றி, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும், மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கயல் தினகரன்
பிப்ரவரி 15 (2024)



திராவிட இயக்க கருத்தியலோடு கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட தொடக்க கால உறுப்பினர்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக கழக மாநில இலக்கிய அணி பொருளாளர் பொறுப்பு வகித்தவர்.

1964ஆம் ஆண்டு கழக நாளேடான 'முரசொலி'யின் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

மிசா காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கருத்துகளை, அவர் ஆசிரியராக இருந்த தமிழ்முரசு பத்திரிகையில் வெளியிட்டவர்.

சென்னை நூலக ஆணையக்குழு தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் "கலைஞர் விருது" பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.